

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.4.2025) தலைமைச் செயலகத்தில், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி 2025 – 2026ஆம் ஆண்டிற்கான எரிசக்தித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை இயக்குநர் திருமதி ச.ப.கார்த்திகா, டாஸ்மாக் மேலாண்மை இயக்குநர் முனைவர் ச.விசாகன், அமலாக்கப் பணியகம் குற்றப் புலனாய்வு துறை கூடுதல் காவல் இயக்குநர் அமல்ராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.4.2025) தலைமைச் செயலகத்தில், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில்பாலாஜி 2025 – 2026 ஆம் ஆண்டிற்கான எரிசக்தித் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றார். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் கூடுதல் தலைமைச் செயலாளர் / தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், தமிழ்நாடு பசுமை எரிசக்தி கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.அனீஷ் சேகர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஸ், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தின் இணை மேலாண்மை இயக்குநர் (நிதி) விஷு மஹாஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இடஒதுக்கீட்டின்படி – மாற்றுத் திறனாளிகள்

# 100 பேருக்கு இந்த ஆண்டும் வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும்!

## பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் உறுதி!

**சென்னை, ஏப். 23 -**

**“விளையாட்டு வீரர்களுக்கான 3 சதவிகித இடஒதுக்கீட்டின்படி மாற்றுத் திறனாளிகளுக்கு இந்த ஆண்டும் குறைந்தது 100 பேருக்கு வேலைவாய்ப்பு பெற்றுத் தரப்படும்” என்று பேரவையில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உறுதி அளித்துள்ளார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், விளையாட்டு வீரர்கள் மற்றும் மாற்றுத் திறனாளி விளையாட்டு வீரர்களுக்கான பணி நியமனம் தொடர்பான வினாக்களுக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அளித்த பதில் வருமாறு:-

கடந்த ஆண்டு சட்டமன்றப் பேரவையில் நான் பேசும்போது, நம்முடைய முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் மாற்றுத் திறனாளி வீரர்கள் உட்பட 100 விளையாட்டு வீரர்களுக்கு 3 சதவிகித இடஒதுக்கீட்டின்கீழ் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தேன். அதன்படி பொதுத் துறை நிறுவனங்களிலும், அரசுத் துறைகளிலும் 104 வீரர்களுக்கு சென்ற ஆண்டு மட்டும் வேலைவாய்ப்பு பணி நியமன ஆணைகளை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அவர்களுடைய கைகளால் வழங்கியிருக்கிறார்.

அதேபோல இந்த ஆண்டும் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மேலும் 100 விளையாட்டு வீரர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கண்டிப்பாக 3 சதவிகித இடஒதுக்கீட்டின்கீழ் அரசு மற்றும் பொதுத் துறைகளில் வேலை வாய்ப்பு வழங்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

நிச்சயமாக இந்த ஆண்டும் குறைந்தது 100 விளையாட்டு வீரர்களுக்கு வேலைவாய்ப்பு நிச்சயம் பெற்று தரப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல, விளையாட்டு வீரர்கள் 3 சதவிகித இடஒதுக்கீட்டின்கீழ் காவல் துறையில் பணியாற்றுகின்ற வாய்ப்பினை நமது அரசு ஏற்படுத்தி கொடுத்துள்ளது. இதற்கான அரசாணை இந்த ஆண்டு வெளியிடப்பட்டு, இதுவரை சென்று ஆண்டில் கொடுத்த 104ல், 11 வீரர்களுக்கு காவலர் பணி Police Constables பணிக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)



மேலும், தற்போது காவல் துறையில் 32 காவல் உதவி ஆய்வாளர்கள் (SubInspectors) பணியிடங்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. விரைவில் இரண்டாம் நிலை காவலர் அதாவது Police Constables பொறுப்புக்கும் அந்த விண்ணப்பங்கள் கோரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். காவல் துறையில் விளையாட்டு வீரர்களுக்கு பணியாற்றுகின்ற வாய்ப்பு நிச்சயம் வழங்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளுடைய முன்னேற்றத்திற்காக நம்முடைய அரசும், முதலமைச்சர் அவர்களும் தொடர்ந்து பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். திட்டங்களைத் தீட்டி வருகின்றார்கள். கடந்த வாரம்கூட, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மாற்றுத் திறனாளிகளை ஊராட்சி அமைப்புகளில் நியமனம் செய்வதற்கான சட்டமுன்வடிவை இந்த அவையில் அறிமுகப்படுத்தினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, முதல் முறையாக மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த நடவடிக்கையால் சுமார் 13 ஆயிரம் மாற்றுத் திறனாளிகள் உள்ளாட்சிப் பொறுப்புகளுக்கு வரவிருக்கின்றார்கள். இதற்காக மாற்றுத்திறனாளி சகோதரர்கள், சகோதரிகள் முதலமைச்சர் அவர்களையும், என்னையும் சந்தித்து நன்றி தெரிவித்தார்கள்.

அவர்கள் சொன்ன வாக்கியம், ‘இத்தனை நாட்களாக கேட்கும் இடத்திலிருந்த நாங்கள், முதன் முதலாக கொடுக்கும் இடத்திற்கு வரப்போகிறோம்’ என்ற நம்பிக்கையான வார்த்தைகளை இங்கே நான் பதிவு செய்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். மற்ற துறைகளைப்போலவே, விளையாட்டுத் துறையிலும் மாற்றுத் திறனாளிகள் சாதிக்க நம்முடைய அரசு தொடர்ந்து துணை நிற்கும்.

போட்டிகளில் பங்கேற்பதற்கு முன்பே பயிற்சிக் கட்டணம், பயண கட்டணம் ஆகியவை நம்முடைய தமிழ்நாடு Champions Foundation அறக்கட்டளைமூலம் தொடர்ந்து நிதி உதவிகளை அளித்து வருகின்றோம். இதுவரை 198 Para playersகளுக்கு மட்டும் 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் அளவிற்கு Champions Foundation-லிருந்து அவர்களுடைய பயணச் செலவிற்கு, பயிற்சி செலவிற்காக மட்டுமே செலவு செய்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல அவர்களில் பலர் வெளிநாடுகளுக்குச் சென்று வெற்றி பெற்ற பின்பு மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு மற்ற வீரர்களுக்கு இணையாக உயரிய ஊக்கத்தொகை high cash incentive இதுவரைக்கும் 196 para playersகளுக்கு நம்முடைய அரசு 27 கோடி ரூபாய் high cash incentive உயரிய ஊக்கத்தொகை வழங்கியிருக்கிறது என்றுக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த 3% இடஒதுக்கீட்டின்கீழ் மற்ற வீரர்களுக்கு இணையாக மாற்றுத்திறனாளி வீரர்களுக்கும் பணி நியமன ஆணைகளை வழங்கி வருகின்றோம். இதுவரை இந்த 104 நபர்களுக்கு கொடுத்திருக்கிறோம். அதில் 5 மாற்றுத் திறனாளி வீரர்களுக்கு அரசுத் துறை மற்றும் அரசு பொதுத்துறை நிறுவனங்களில் வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. சென்றாண்டு target 100 என்கிறபோது, 104 achieve செய்தோம். இந்தாண்டு 100. இதில் குறைந்தபட்சம் 25 மாற்றுத்திறனாளி வீரர்களுக்கு நிச்சயமாக வேலை வாய்ப்பு அரசு பொதுத் துறை நிறுவனங்களிலும், அரசுத் துறைகளிலும் வழங்கப்படும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்தார்.




## தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

## ஒன்றிய-நகர-பகுதி-பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்

### இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், கழக இளைஞர் அணி மண்டலம்–8 க்கு உட்பட்ட இராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் வடக்கு, விருதுநகர் தெற்கு, தேனி வடக்கு, தேனி தெற்கு, தென்காசி வடக்கு மற்றும் தென்காசி தெற்கு ஆகிய கழக மாவட்டங்களுக்கான ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஏற்கனவே விருதுநகர் தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த நிர்வாகிகளுக்கான அறிமுகக்கூட்டம் நடந்து முடிந்துள்ள நிலையில், ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டத்தை, மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், அந்தந்த மாவட்டங்களில் ஏற்பாடு செய்திட வேண்டுமென மாநில இளைஞர் அணித் துணைச் செயலாளர், மாவட்ட அமைப்பாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 22-04-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் முன்னாள் தலைவர்

# டாக்டர் சாந்தா திருவுருவச் சிலை - நினைவு அருங்காட்சியகம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, ஏப். 23 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (22.4.2025) சென்னை, அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், அடையாறு புற்றுநோய் மருத்துவமனையின் முன்னாள் தலைவர் டாக்டர் சாந்தா அவர்களின் திருவுருவச் சிலை மற்றும் நினைவு அருங்காட்சியகத்தை திறந்து வைத்தார்.**

**புற்றுநோய் துறையில் டாக்டர் சாந்தா ஆற்றிய சேவைகள்!**

உலகப் புகழ்பெற்ற புற்று நோயியல் மருத்துவர் சாந்தா அவர்கள் 11.3.1927 அன்று பிறந்தார். டாக்டர் சாந்தா அவர்கள் மயிலாப்பூர் தேசிய பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்து, 1949 ஆம் ஆண்டு தனது மருத்துவப் பட்டப் படிப்பு மற்றும் 1955ஆம் ஆண்டு மகளிர் மருத்துவம் மற்றும் மகப்பேறியல் துறையில் உயர் பட்டப்படிப்பு (MD) ஆகியவற்றை மெட்ராஸ் மருத்துவக் கல்லூரியில் படித்து முடித்தார்.

ஆரம்பத்தில் பெண்களுக்கான மருத்துவத்தில் ஆர்வம் இருந்தபோதிலும், பிறகு புற்றுநோயியல் துறைக்கு மாறினார். பிறகு 1955 ஆம் ஆண்டு மருத்துவ அதிகாரியாக புற்றுநோய் நிறுவனத்தில் சேர்ந்த அவர், புகழ்பெற்ற டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மற்றும் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரின் தலைமை மற்றும் வழிகாட்டுதலின்கீழ் தனது பணியைத் தொடங்கினார்.

ஏப்ரல் 13, 1955 அன்று முதல் குடிபெயர்ந்து, தனது வாழ்நாள் முழுவதும் அங்கேயே வாழ்ந்து மறைந்தார். டாக்டர் சாந்தா அவர்கள் மருத்துவமனையில் வாழ்ந்த அந்த இடம் தற்போது அருங்காட்சியகமாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

டாக்டர் வி. சாந்தா 60 ஆண்டுகளுக்கும் மேலாக தனது வாழ்க்கையை இந்த நிறுவனத்திற்காக அர்ப்பணித்தார். அனைத்து புற்றுநோய் நோயாளிகளுக்கும் சிகிச்சை அளிப்பதை உறுதி செய்தல், புற்றுநோய் ஆராய்ச்சியை மேம்படுத்த வேண்டிய அவசியம் மற்றும் புற்றுநோய்தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டை மேம்படுத்துதல் போன்றவற்றில் அவர் ஆழ்ந்த அர்ப்பணிப்புடன் செயல்பட்டார். இந்தியாவில் புற்றுநோய் சிகிச்சை பற்றி தெளிவற்றதாக இருந்த நேரத்தில், புற்றுநோய் சிகிச்சைக்கு பன்நோக்கு சிகிச்சை அணுகுமுறை கொண்டு வந்த முன்னோடி ஆவார்.

புற்றுநோய் நிறுவனம் பொறுப்புகள் தவிர்த்து டாக்டர் வி. சாந்தா அவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தின் சிண்டிகேட் உறுப்பினராகவும் பணியாற்றினார். மேலும், அவர் உலக சுகாதார நிறுவனத்தில் (WHO) புற்றுநோய் ஆலோசனைக் குழுவில் இருந்தார் மற்றும் புற்றுநோய்க்கான மாநில ஆலோசனைக் குழுவின் ஒருங்கிணைப்பாளராகவும் இருந்தார். அவர் இந்திய புற்றுநோயியல் சங்கத்தின் தலைவராகவும் (8890), புற்றுநோய் கட்டுப்பாட்டுக்கான ஆசிய & பசிபிக் அமைப்புகளின் கூட்டமைப்பு (9799) தலைவராகவும், 15வது ஆசிய & பசிபிக் புற்றுநோய் மாநாட்டின் தலைவராகவும் (1999) பணியாற்றினார்.

**தேசிய மற்றும் உலகளாவிய விருதுகள்!**

டாக்டர் சாந்தா தேசிய மற்றும் சர்வதேச அமைப்புகள் மற்றும் இந்தியாவின் மாநில மற்றும் மத்திய அரசுகளிடமிருந்து ஏராளமான விருதுகளையும் கௌரவங்களையும் பெற்றுள்ளார். மாநில அரசு 2013 ஆம் ஆண்டு அவ்வையார் விருதை வழங்கி கௌரவித்தது. மிகவும் மதிப்புமிக்க தேசிய விருதுகளில், அவருக்கு 1986 ஆம்ஆண்டு பத்மஸ்ரீ, 2006 ஆம் ஆண்டு பத்ம பூஷண் மற்றும் 2016 ஆம் ஆண்டு பத்ம விபூஷண் விருதுகள் வழங்கப்பட்டன, இது அவரது வாழ்நாள் சேவை மற்றும் அர்ப்பணிப்புக்கு சான்றாக நிற்கிறது.

மருத்துவத் துறையில் அவரது சிறந்த பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாக, டாக்டர் சாந்தாவுக்கு 1998 ஆம் ஆண்டு ஆந்திர மாநிலம் திருப்பதியில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகமும், 2002 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக் கழகமும் அறிவியல் முனைவர் பட்டம் வழங்கியது. 2005 ஆம் ஆண்டில், டாக்டர் சாந்தா அவர்களுக்கு ஆசியாவின் மிக உயர்ந்த கௌரவங்களில் ஒன்றான பொது சேவைக்கான ரமோன் மகசேசே விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த போது அடையாறு புற்றுநோய் மருத்துவமனையில் 1973ஆம் ஆண்டு தொடர் எக்ஸ் கதிர் தொடர் படமெடுக்கும் கருவியின் சேவையை தொடங்கி வைத்ததோடு, 2000ஆம் ஆண்டு மதுரம் நாராயணன் உள்நோயாளிகள் பிரிவினையும் தொடங்கிவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்ச்சியில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன், சட்டமன்ற உறுப்பினர் அசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார், அடையாறு புற்றுநோய் மருத்துவமனை தலைவர் என்.எல். ராஜா, இயக்குநர் டாக்டர் கல்பனா பாலகிருஷ்ணன், இந்து குழும இயக்குநர் என். ராம், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், அடையாறு புற்றுநோய் மருத்துவமனை செயல் துணைத் தலைவர் டாக்டர் ஹேமந்த் ராஜ், துணைத் தலைவர் விஜய்சங்கர், டாக்டர் சுவாமி நாதன், டாக்டர் சுரேந்திரன் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.